# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 57 — 1973 අප්‍රේල් 27 වැනි සිකුරාදා — 1973.04.27

57 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு எப்பிறல் மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 413 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 414 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 415 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

கொழும்பு மற்றும் திருக்கோணமலை துறைமுகங்களிலிருந்து கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்துக்கு சரக்கை அப்புறப்படுத்தி அனுப்புவதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப் படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் 1973-05-07 ந் திகதி பி.ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

கேள்விப் பத்திரப் படிவங்களையும் மற்றும் ஏனைய விபரங்களையும் விண்ணப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2.
1973-04-07,

4—684—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57

---

### கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

போக்குவரத்துச் சேவைகள் வழங்குவதற்கு கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறு விலைகள் 1973-05-08 ந் திகதி பி.ப. 2.00 மணிக்கு மூடப்படும். கூறுவிலைப் படிவங்களையும் மற்றும் ஏனைய விபரங்களையும் விண்ணப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2,
1973.04.06,

பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

4—683—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல 57

---

### முக்கிய அறிவித்தல்

ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக் கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத் திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பி. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1973 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

### தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

#### முப்பத்தைந்து இலட்சம் துளை அட்டைகள் விநியோகித்தல்

முப்பத்தைந்து இலட்சம் துளை அட்டைகள் விநியோகிப்பதற்கான கேள்விப் பத்திரங்களை 1973 ம் ஆண்டு யூன் மாதம் 12 ம் திகதி மாலை 2 மணி 30 நிமிடங்கள்வரை தலைவர், கேள்விப்பத்திர சபை, தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

எல்லாக் கேள்விப் பத்திரங்களும் இரு பிரதிகளில் இணைக்கப்பட்டு "துளை அட்டைகள் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரம்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு, பொறியிட்ட பதிவுத் தபால் மூலம் தலைவர், தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். அத்துடன் மாதிரி 'துளை அட்டையும்' இணைக்கப்படுதல் வேண்டும்.

1973 ம் ஆண்டு யூன் மாதம் 12 ந் திகதி காலை 10.05 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமூகம் தருவதற்கு அனுமதிக்கப்படுவர்.

#### விபரக் கூற்றுகள்

80—பத்தி துளை அட்டைகள்

நீளம் — 7.375 அங். + 0.005 அங்.
அகலம் — 3.250 அங். + 0.003 அங்.
தடிப்பு — 0.0070 அங். + 0.0004 அங்.

50% சாரீரப் பதனும் 73° பரனேட்டும் உள்ளதாக இருக்கவேண்டும். மூலைகள் சதுரமாக அல்லது வட்டமாக இருக்கலாம். மட்டமாக்கப்பட்ட மூலைகள் ¼ அங்குலமான ஆரையுடையதாக இருக்க வேண்டும். எல்லாக் கோணங்களும் மடிப்புத் தளங்களற்றனவாக விருக்கவேண்டும். ஒரு மூலை 60° யில் தலைப்புறமாக ¼ அங்குலத்திலும் பக்கப்பாடாக கிட்டத்தட்ட ⅜ அங்குலத்திலும் வெட்டப்பட்டிருக்கலாம். வெட்டும்பொழுது அட்டைகள் அதிலுள்ள உள்ளணுத்துகள் ஒழுங்கு அட்டையில் நீளப்பாட்டில் ஓடியதாயிருக்க வேண்டும். மின்வலு ஊடுருவக்கூடிய ஏதுவான இடங்கள் இருக்கின்றனவாவென அட்டைகளை மின்சக்தியால் பரிசோதித்து குறையுள்ள அட்டைகளை நீக்கிவிடவேண்டும்.

அச்சிடுதல் :—மிகையான மையில்லாது படிவு தெளிவாக இருக்க வேண்டும். ஆனால் எந்தவிதமான சூழ்நிலையிலும் அட்டையின் ஒவ்வொரு பக்கத்திலும் அதன் உரிய இடத்திலிருந்து மேற்பரப்பில் எந்தப் பாகத்தையாவது புடைப்புரு ஏற்படக்கூடியதாக அட்டையை அச்சிடக்கூடாது.

நிறம் :—மண் நிற மஞ்சள்.

எக்காரணம் கொண்டும் கேள்விப் பத்திரங்களை நிராகரிக்கவோ அல்லது கேள்விப் பத்திரங்களின் எப்பகுதியையோ ஏற்றுக் கொள்ளவோ உரிய சகல உரிமைகளும் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்கள அதிபருக்குண்டு.

எல். பி. ராஜகருணு,
தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்கள அதிபர்.

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்,
த. பெ. எண். 563,
கொழும்பு 7,
11 ஏப்றில், 1973.

4-617—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57

---

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

#### சுங்க விற்பனை

பாவனையில் இருந்த 25 சிறீ 2756 இலக்கமுடைய உழவு இயந்திரமும் (டிராக்டர்), 55 சிறீ 3833 இலக்கமுடைய பெட்டியும் (ரெயிலர்) 1973 ம் ஆண்டு வைகாசி மாதம் 14 ம் திகதி காலை 9.00 மணிக்கு வவுனியாக் கச்சேரியில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

இவைகளை வாங்க விரும்புவோர் 12.5.73 காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரையில் பார்வையிடலாம்.

ஏல விற்பனை முடிவில் ஏலத்தில் கடைசியாகக் கூறப்படும் தொகையில் 50% விதத்தை உடனடியாகக் கட்டவேண்டும்.

ஏலத்தில் பொருட்களை வாங்குவோர் தாம் ஏலத்தில் வாங்கிய பொருட்களை ஏலவிற்பனை செய்த திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் மீட்கத் தவறினால் அதே பொருட்கள் திரும்பவும் ஏலத்தில் விற்பனை செய்யப்படுவதுடன் கட்டப்பட்ட முற்பணமும் பறிமுதல் செய்யப்படும்.

1954 ம் ஆண்டு மே மாதம் 28 ம் திகதி பிரசுரிக்கப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் உள்ள விதிகளுக்கமைய விற்பனை நடைபெறும்.

எல். பி. விக்கிரமாராச்சி,
சுங்க கலக்டர்,
வவுனியா மாவட்டம்.

கச்சேரி,
வவுனியா, 10.04.73.

4-687—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57

---

#### ஸ்ரீ லங்கா பொலிஸ் படை

1973 ம் ஆண்டு வைகாசி மாதம் 07 ம் திகதி காலை 10.00 மணிக்கு கீழ்க் காணப்படும் பொருட்கள் பண்டாரவளை உதவி பொலிஸ் அதிபர் காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனையாகும் :—

| | |
|---|---|
| 1. பூட் சப்பாத்து தேய்க்கும் ப்ரஸ்கள் ... ... | 13 |
| 2. பலகல கெப் ... ... | 30 |
| 3. பிலியட் மேசை பந்துக்கள் 3 அங்குலம் ... ... | 03 |
| 4. இரும்புக் கட்டில்கள் ... ... | 07 |
| 5. கம்பளி (போர்வை) ... ... | 42 |
| 6. சைக்கிள் டயர் & டியூப் ... ... | 04 |
| 7. கையிறு பார்ப்பிஸ் ... ... | 03 |
| 8. எண்ணெய் பீப்பாய் (46 கலன் கொண்ட) ... ... | 03 |
| 9. எண்ணெய் போடும் (4 கலன் டின்கள்) ... ... | 09 |
| 10. எண்ணெய் போடும் (1 கலன் டின்கள்) ... ... | 12 |
| 11. பெலனல் கமிசிகள் ... ... | 65 |
| 12. கார்ப்பட் ... ... | 15 |
| 13. புடவைகள் போடும் பெட்டிகள் ... ... | 05 |
| 14. மிட்ன் (கைக்கு போடும் மேஸ்கள்) ... ... | 08 |
| 15. கைபந்து கவர்கள் ... ... | 02 |
| 16. குளிருக்கு அணியும் சுவீட்டர்கள் ... ... | 58 |
| 17. சூடான கால்சட்டை (நீட்டம்) ... ... | 02 |
| 18. சூடான கமிசிகள் (டியூனிக்) ... ... | 02 |

குறிப்பு :—1973 வைகாசி மாதம் 7 ம் திகதி காலை 8.00 மணி முதல் 10.00 மணிவரை மேற்கூறிய பொருட்களை பரிசோதிக்க முடியும்.

பொருட்களை வாங்குவோர் பணத்தைக் கட்டிக் கொள்வதோடு அதே தினம் பொருட்களை அகற்ற வேண்டும்.

எம். ஐ. த சில்வா,
உதவி பொலிஸ் அதிபர்.

பொலிஸ் காரியாலயம்,
பண்டாரவளை.

4-618—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57

# ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

**மன்னார் மாவட்ட கள்ளுத் தவறணை குத்தகை—1.7.73 தொடக்கம் 30.6.74 வரை**

இதிற் காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் சொல்லப்பட்ட, மன்னார் மாவட்ட கள்ளுத்தவறணைகளில் 1.7.73 தொடக்கம் 30.6.74 வரைக்குமான காலஎல்லைவரை சில்லறையாக விற்பனை செய்வதின் பொருட்டு சிறப்புரிமை வழங்குவதற்காக நடைமுறையில் இருந்துவரும் பொதுவிதிகளுக்கு அமையவும் 31.10.72 ம் திகதி பிரசுரிக்கப்பட்ட 31/3 இலக்க அரசாங்க வர்த்தமானியில் காணப்படும் கள்ளுத்தவறணைக் குத்தகை விதிகளுக்கு அமையவும் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திரங்கள், " மன்னார் மாவட்டக் கள்ளுக் குத்தகை 1973–74 " என்று குறிப்பிடப்பட்டு, அட்டவணையிற் காட்டப்பட்ட நேரத்திற்குப் பிந்தாமல் வந்து சேரக்கூடியதாக, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

3. ஒவ்வொரு தவறணைக்கும் தனித்தனிக் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படவேண்டும். எவரும், எந்தவொரு தவறணைக்காவது ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விப்பத்திரங்களை அனுப்புவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். ஐந்து பேர்களுக்கு அதிகமானவர்கள் கூட்டாகச் சேர்ந்து எந்தவொரு தவறணைக்கும் கேள்விப்பத்திரங்கள் அனுப்பமுடியாது.

4. கேள்விக்காரர்—

(அ) நேர்முகத்தில் சமுகந்தராவிட்டால் ;

(ஆ) எந்தப் பகுதியில் அவருடைய காணி இருக்கிறதோ அந்தப் பகுதிக் காரியாதிகாரியிடம் பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்துடன் கேள்விப்பத்திரம் அணைக்கப்படாவிட்டால்,

(இ) பெறுமதிக்குரிய அத்தாட்சிப் பத்திரத்தில் சொல்லப்பட்ட காணியின் பெறுமதி, கேள்விப்பத்திரத்திற் குறிக்கப்பட்ட தொகையின் 25 வீதத்திற்குக் குறைந்தால்,

அவரது கேள்விப்பத்திரம் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

(ஒன்றுக்கு மேற்பட்ட தவணைக்குக் கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கும் கேள்விக்காரர், அதே வேளையில் அதே ஆண்டுக்குரிய வேறு தவறணைக்குக் கேள்விப்பத்திரத்துடன் பெறுமதி அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப் பிரதியை அணைத்திருந்தால் அப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை இணைக்கலாம். அத்தகைய ஒவ்வொன்றிலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுமதிப் பத்திரப் பிரதி, மூலப்பிரதி இணைக்கப்பட்ட தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் கொண்ட குறிப்பை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கலாம். அல்லது மன்னார்க் கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிலும் போடலாம். ஆனால், கேள்விப்பத்திரம் எந்தத் தவறணைக்குத் தாக்கல் செய்யப்படுகிறதோ அந்தத் தவறணையின் பெயரும் இலக்கமும் என்வலப்பின் இடது பக்க மேல்மூலையில் பொறிக்கப்பட்டு, என்வலப்பு சீல்செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தனித்தனி என்வலப்பில் வைத்து, மேற்காட்டிய குறிப்புகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

6. கீழே சொல்லப்பட்ட ஒவ்வொரு தவறணைக்கும் எதிராகவுள்ள வைப்புப் பணத்தைக் கேள்விக்காரர் செலுத்துதல் வேண்டும் :—

(அ) மன்னார்க் கச்சேரியிலோ அல்லது வேறு எந்தக் கச்சேரியிலாவது வைப்புப் பணத்தைச் செலுத்தலாம். வைப்புப் பணத்திற்குரிய பற்றுச்சீட்டு கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர், விற்பனை நிபந்தனைகளில் உடனடியாகக் கைச்சாத்திடத் தவறினால், அவரது வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படும்.

(இ) தெரிவு செய்யப்படாத கேள்விக்காரர்களின் வைப்புப்பணம், தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்திற் கைச்சாத்திட்ட பின்னர் திருப்பிக் கொடுக்கப்படும்.

7. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ அரசாங்க அதிபருக்கு மாத்திரம் உரிமையுண்டு.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர், விற்பனை நிபந்தனையிலும் ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவும், அரசாங்க அதிபரால் குறிப்பிடப்படும் பிணைப்பணத்தைச் செலுத்தவும் தேவையான முத்திரைகளைக் கொடுப்பதற்கும் தயாராயிருத்தல் வேண்டும்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் குத்தகைக்காரர் என அறிவிக்கப்பட்ட மாத்திரத்தில், தான் எந்த இடத்தைத் தவறணையாகத் தெரிவு செய்திருளென்பதை மன்னார் அரசாங்க அதிபருக்கு அறிவித்து அவரிடமிருந்து அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

10. மேற்கொண்டு விபரங்கள் அறிய வேண்டுமாயின் மன்னார்க் கச்சேரிக்கு மனுச்செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

**(மன்னார் மாவட்டக் கள்ளுத் தவறணைகள், 1.7.73—30.6.74)**

| தொடர் இல. | பிரிவு | தவறணைக்காகத் தெரிவு செய்யப்படும் உள்ளூர்ப் பகுதி | வைப்புப் பணத் தொகை ரூ. ச. | கேள்விப்பத்திரங்கள் முடிவடையும் நேரமும் திகதியும் |
|---|---|---|---|---|
| 1 | .. மன்னார் | .. மன்னார் | .. 2,000 | .. 4.5.73 மு.ப. 10.00 |
| 2 | .. மன்னார் | .. தலைமன்னார் | .. 1,500 | .. 4.5.73 மு.ப. 10.20 |
| 3 | .. மன்னார் | .. பேசாலை | .. 1,500 | .. 4.5.73 மு. ப. 10.40 |
| 4 | .. மன்னார் | .. உயிலங்குளம் | .. 1,500 | .. 4.5.73 மு.ப. 11.00 |
| 5 | .. மாந்தை | .. கட்டாடிவயல் | .. 500 | .. 4.5.73 மு.ப. 11.20 |
| 6 | .. முசலி | .. வங்காலை | .. 1,000 | .. 4.5.73 மு.ப. 11.40 |
| 7 | .. முசலி | .. அரிப்பு | .. 1,000 | .. 4.5.73 ந.ப. 12.00 |
| 8 | .. மன்னார் | .. மாதுவாடி | .. 1,500 | .. 4.5.73 பி.ப. 12.20 |

மன்னார்க் கச்சேரி,
1973 ம் ஆண்டு ஏப்பிறல் மீ 06 ந உ.

ச. கதிர்காமநாதன்,
மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்.

4-694—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57

1973/74 ம் வருடத்திற்குத் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கள்ளுத்தவறணைகளைக் குத்தகைக்கு விடுதல்—1.7.73–30.6.74

1973 ம் வருடம் யூலை மாதம் 1 ந் திகதி முதல் 1974 ம் வருடம் யூன் மாதம் 30 ந் திகதி வரையுமுள்ள காலத்தினுள் கள்ளு சில்லறையாக விற்பனை செய்வதன் பொருட்டு 1972.10.31 ந் திகதிய 31/3 ம் இலக்க ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு (அதி விஷேட) வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப் பட்டுள்ள கள்ளுத் தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கும் மதுபானத் தீர்வை அனுமதிப்பத்திரக் கட்டுப்பாடுகட்கும் அமைவாக அக்காலத்தினுள் நடைமுறையிலிருந்துவரும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கள்ளுத் தவறணைகளுக்காகக் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எவ்வொரு கச்சேரியிலிருந்தாவது கீழே குறிப்பிட்டுள்ள கேள்வி வைப்புத் தொகைகளைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட உரிய கேள்விப்படிவத்தில் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். இக்கேள்விப்படிவத்துடன் வைப்புப்பணம் செலுத்தியதற்கான கச்சேரிப்பற்றுச்சீட்டையும் சொத்துக்கள் அமைந்திருக்கும் பிரிவிலுள்ள பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்ட சொத்து அத்தாட்சிப்பத்திரத்தையும் இணைத்தல் வேண்டும். சொத்து அத்தாட்சிப்பத்திரம் கேள்விக்காரர்கள் தாங்கள் கேட்கும் எல்லாத் தவறணைகளின் மொத்தக் கேள்வித் தொகைக்கு 100 க்கு 25 வீதத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். கேள்விக்காரர்கள் மாவட்டக் காணிப்பதிவாளர்களிடமிருந்து சொத்து அத்தாட்சிப்பத்திரத்திற் குறிப்பிட்ட ஆதனங்கள் வேறு எவ்வித பொறுப்புகளுக்கும் உபயோகப்படுத்தப்படவில்லையென்று அத்தாட்சிப்பத்திரம் பெற்று சொத்து அத்தாட்சிப்பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரம் அரசாங்க அதிபர், திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் குறிப்பிடவேண்டியதுடன் முத்திரையுமிட்டு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவு நேரங்கட்கு முன்னர் திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபருக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது அந்நேரத்திற்கு முன்னர் திருக்கோணமலைக் கச்சேரியில் அதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் அதனை இடல் வேண்டும்.

4. கேள்விகள் 1973 ம் ஆண்டு மே மாதம் 9 ந் திகதி (புதன்கிழமை) கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் முடிவடையும்.

5. ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்விகள் முடிவடையும் நேரம் திருக்கோணமலைக் கச்சேரியில் பிரசன்னமாயிருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர்கள் குத்தகைக்காரர்கள் என்று அறிவிக்கப்பட்ட மாத்திரத்தில் விற்பனை நிபந்தனைகளிலும் கைச்சாத்திட்டு அரசாங்க அதிபரால் குறிப்பிடப்படும் பிணைப்பணத்தைச் செலுத்தவும் தயாராயிருத்தல் வேண்டும்.

6. குத்தகையைப் பெற்ற கேள்விக்காரருக்கு அதுவிடயம் அறிவிக்கப்பட்டதும் குறிப்பிடப்பட்ட பிணைப்பணத்தைச் செலுத்தத்தவறும் பட்சம் அன்னாரின் கேள்வி வைப்புப்பணம் உரிமையற்றுப் போனதைப் பிரகடனப்படுத்துவதுடன் அன்னாரின் பெயர் மதுபானத்தீர்வை அனுமதிப்பத்திரங்களுக்குரிய தவறியோர் பெயர் அட்டவணையில் சேர்த்துக்கொள்ளப்படுவர். இதுபோன்ற சந்தர்ப்பங்களிலன்றிக் குத்தகை பெற்றதும் குத்தகை நிபந்தனைகளுக்குக் கையெழுத்திடுவதுடன் குறித்த பிணைப்பணமும் செலுத்தப்பட்ட பின்னர் சகல கேள்விக்காரர்களுக்கும் கேள்வி வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்படிவங்களைப் பெற்றபின் கேள்வி கேட்கத் தவறியவர்கள் கேள்வி முடிவடைந்த திகதியிலிருந்து 14 நாட்கள் முடிவடைவதற்கு முன் நிரப்பப்படாத கேள்விப்பத்திரப் படிவத்தையும் அத்துடன் வழங்கப்பட்டிருக்கக்கூடிய எல்லா ஆவணங்களையும் விண்ணப்பத்துடன் அரசாங்க அதிபரிடம், திருப்பிக் கொடுப்பவர்களுக்கு மட்டுமே உரிய கேள்வி வைப்புக்கள் திருப்பிக் கொடுக்கப்படும்.

7. மேற்கொண்டு விபரங்கள் அறிய வேண்டுமாயின் திருக்கோணமலைக் கச்சேரிக்கு மனுப்பண்ணி அறிந்துகொள்ள வேண்டும்.

8. தற்சமயம் தவறணைகள் நடக்குமிடங்களில் இம்முறையும் தவறணைகள் நடத்த முடியுமென்பதற்கு உத்தரவாதமளிக்க முடியாது.

9. 1973–74 ம் ஆண்டுக்கான அனுமதிபெற்ற தவறணைகளின் நிரல் பின்வருமாறு :—

| தவறணை இல. | பிரிவு | உள்ளூர்ப்பகுதி | தவறணை திறக்கும் நேரம் மு.ப. | தவறணை மூடும் நேரம் பி.ப. |
|---|---|---|---|---|
| 1 | வட்டாரம் 2, திருக்கோணமலை நகரசபை | வில்லூண்டி | 8.00 | 8.00 |
| 2 | வட்டாரம் 9, திருக்கோணமலை நகரசபை | உப்புவெளி | 8.00 | 8.00 |
| 3 | தெக்கிலூத்து தம்பலகாமம் பற்று | தெக்கிலூத்து | 8.00 | 6.30 |
| 4 | கட்டுக்குளம்பற்று | நிலாவெளி | 8.00 | 6.30 |

கேள்வி வைப்புத் தொகையும் கேள்விகள் முடிவடையும் நேரமும்

| தவறணை இல. | கேள்வி வைப்புத்தொகை | நேரம் |
|---|---|---|
| 1 | ரூபா 3,000 | மு. ப. 9.00 மணி |
| 2 | ரூபா 3,000 | மு. ப 9.30 மணி |
| 3 | ரூபா 1,500 | மு. ப. 10.00 மணி |
| 4 | ரூபா 1,500 | மு. ப. 10.30 மணி |

கச்சேரி, திருகோணமலை,
1973 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 11 ந் வ.

திஸ்ஸ தேவேந்திரா,
திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபர்.

4–637—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் **ஏற்றுக்** கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை—1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | 6.4.73 | வெள்ளி | .. | 28.3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 11.4.73 | புதன் | .. | 4.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 19.4.73 | வியாழன் | .. | 11.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 27.4.73 | வெள்ளி | .. | 18.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| **மே** | .. | 4.5.73 | வெள்ளி | .. | 25.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 11.5.73 | வெள்ளி | .. | 2.5.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 18.5.73 | வெள்ளி | .. | 9.5.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 25.5.73 | வெள்ளி | .. | 15.5.73 | செவ்வாய் | | ந.ப. 12.00 |
| **யூன்** | .. | 1.6.73 | வெள்ளி | .. | 23.5.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 8.6.73 | வெள்ளி | .. | 30.5.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 14.6.73 | வியாழன் | .. | 6.6.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 22.6.73 | வெள்ளி | .. | 13.6.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 29.6.73 | வெள்ளி | .. | 20.6.73 | புதன் | .. | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஒகத்து மீ 18 ந் உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.